


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசிய–பசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CII–தமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், டிட்கோ மற்றும் டாடா டெக்னாலஜீஸ் ஆகிய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து, தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையம் (TN ENGINE) என்ற ஒரு பொது பொறியியல் வசதி மையத்தை தொடங்கிடும் வகையில், கோயம்புத்தூர் – அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மொத்தம் ரூ.400 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு, அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசிய–பசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CII–தமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசு!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...** முதல் பக்கத் தொடர்ச்சி

மூன்றாண்டுகளாக தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது.

**புதிதாக தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

உங்களுக்கு என் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் தொழில் நிறுவனங்களை தொடங்கினால் மட்டும் போதாது; உங்களைப் போன்று இருக்கின்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழ்நாட்டிற்கு அழைத்து வாருங்கள்... தொழில் தொடங்க வையுங்கள்...

தமிழ்நாடு அரசின் தொழில்துறை தூதுவர்களாக நீங்கள் எல்லோரும் மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த மூன்று ஆண்டுகளில், எண்ணற்ற தொழில் திட்டங்களை தமிழ்நாடு ஈர்த்திருக்கிறது. அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்து, அதன்மூலமாக, 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற தமிழ்நாட்டின் இலக்கை அடைவதற்காக நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது.

இந்த இருமுனை முயற்சி, இப்போது சாதகமான பலன்களை தந்து வருகிறது. இன்றைய தினம் பல்வேறு வகையான திட்டங்களை தொடங்கி வைத்திருக்கிறேன்.

- ★ மோட்டார் வாகனங்கள்,
- ★ பொது உற்பத்தி,
- ★ தொழிற் பூங்காக்கள்,
- ★ மின்னணுவியல்,
- ★ மருத்துவ உபகரணங்கள்,
- ★ தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள்,
- ★ உணவு பதப்படுத்துதல்,
- ★ ரசாயனங்கள்,
- ★ ஜவுளி மற்றும் ஆடைகள்,
- ★ உயிர் அறிவியல்,
- ★ பசுமை ஹைட்ரஜன்
- ★ கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட

பல்வேறு நிறுவனங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 803 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட இருக்கிறது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இதில் பெருமளவிலான வேலைவாய்ப்புகள் பெண்களுக்கானவை!

பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்ற நம்முடைய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்த சாதனை மேலும் ஊக்கமளிக்கிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி; அனைத்து சமூக வளர்ச்சி; அனைத்து மாவட்ட வளர்ச்சி; என்று நான் சொல்லி வருவதன் அடையாளம் இவைதான்!

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் நம்முடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

## உலக முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலம் தமிழ்நாடு!

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் திட்டங்கள் தொடங்கப்படுவதால், அந்த மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், அந்தப் பகுதிகள் உறுதியாக சமூக, பொருளாதார வளர்ச்சி பெறும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு!**

திறன்மிகு தொழிலாளர்கள் உள்ள மாநிலம், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் கொண்ட மாநிலம் என்று பல்வேறு சிறப்பம்சங்களை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. மாநிலத்தில் பெண்களின் கல்வியறிவும், வேலைவாய்ப்பு விகிதமும், நாட்டின் சராசரியைவிட அதிகமாக இருக்கிறது. நாட்டிலேயே பெண்களுக்கான மிகவும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று உலகம் முழுவதும் தெரியும்.

உட்கட்டமைப்பு தொடர்பான தொழில் துறை வளர்ச்சி, வணிகம் செய்வதை எளிதாக்குவது, சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வாழ்க்கை வசதிகளை எளிதாக்குவது, இவையெல்லாம் அரசின் குறிக்கோள்கள். இதை செயல்படுத்துவதற்காகதான் எங்களுடைய கடமையாக கருதுகிறோம்!

உலகம் எங்கும் இருக்கும் முதலீட்டாளர்கள் விருப்பத்தோடு தேர்வு செய்யும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதற்கு இன்றைய நிகழ்வே ஒரு எடுத்துக்காட்டு!

130க்கும் மேற்பட்ட ‘ஃபார்ச்சூன் 500’ நிறுவனங்கள் தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்துள்ளதும், தமிழ்நாட்டின் முதலீட்டு ஈர்ப்புத் திறனுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது.

மிகுந்த திறமையும், படைப்பாற்றலும் கொண்டவர்கள், தமிழ்நாட்டின் துடிப்பான இளைஞர்கள்! நம்முடைய இளைஞர்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில், பல்வேறு வகைகளில் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, எங்கள் இளைஞர்களின் திறன்களை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று முதலீட்டாளர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு முழு ஆதரவளிக்கும்!**

இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பாக என்னுடைய வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, ஒவ்வொரு திட்டத்தின் சுமுகமான செயல்பாட்டுக்கும் சாதகமான சூழலை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு மனப்பூர்வமான ஆதரவளிக்கும் என்று உறுதியளித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

**சைதையில் -– எம்.சி. இராஜா விடுதிக் கட்டடம் –**

# வள்ளுவர்கோட்டம் புனரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, ஆக.22-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், நேற்று (21.08.2024) சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி.இராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் விடுதி கட்டடம் மற்றும் சென்னை வள்ளுவர் கோட்டம் புனரமைப்பு பணிகளை களஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி.இராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில், 1 இலட்ச சதுர அடி பரப்பளவில், தரைதளம் மற்றும் 10 தளங்களுடன்கூடிய ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்த விடுதியில் 484 மாணவர்கள் தங்கும் வகையில், 121 அறைகள் கட்டப்பட்டு வருகிறது. மேலும், விடுதி வார்டன் அறை, சமையலறை, உணவருந்தும் அறை, பொருள் வைப்பறைகள், பன்னோக்கு அறை, நூலக அறை, உடற்பயிற்சி அறை உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இப்பணியை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு செய்து, கட்டுமான பணியை குறித்த காலத்திற்கு முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.



மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 1976 ஆம் ஆண்டு வள்ளுவர் கோட்டம், சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது. தற்போது, முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வள்ளுவர் கோட்டம் நவீன உத்திகளைப் பயன்படுத்தி புனரமைப்புப் பணிகள் ரூ.80 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இவ்வளாகத்தில் உள்ள கலையரங்கம், குறள்மணி மாடகூரை புனரமைப்பு, தரைகள் புதுப்பித்தல், குறள்மணிமாட ஓவியம் சீரமைத்தல், வளாகச்சுற்றுச் சுவர் புதுப்பித்தல், தூண்கள், நுழைவாயில் பகுதிகளில் சிற்ப வேலைபாடுகள் புதுப்பித்தல், இரண்டு புதிய கவின்மிகு நுழைவுவாயில் அமைத்தல், மாற்றுத் திறனாளிகள் நடைபாதை அமைத்தல், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தேயக மின் தூக்கி அமைத்தல், வாகன நிறுத்துமிடம், உணவுக்கூடம், விற்பனை மையம், மழைநீர் வடிகால் வசதி, நடைபாதை வசதி, குடிநீர் வசதி, செயற்கை நீரூற்று அமைத்தல், ஒளிஒலி காட்சி அமைத்தல், சிதிலமைடைந்த மின்சாதனங்கள் மற்றும் மின் இணைப்புகள் மாற்றுதல், கூட்ட அரங்கம் மற்றும் குறள்மணி மாடத்தில் குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல், தீ தடுப்பு வசதிகள் அமைத்தல், ஒலி பெருக்கி அமைப்பு நிறுவுதல், நுழைவாயில் புதுப்பித்தல் பணி, உயர் அழுத்த மின் வசதி ஏற்படுத்துதல், 250 கே.வி.ஏ. ஜெனரெட்டர் மற்றும் CCTV பொருத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை களஆய்வு செய்த பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் புனரமைப்பு பணிகளை குறித்த காலத்திற்கு முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இந்த களஆய்வின் போது, பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஆயிரம் விளக்கும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், சிறப்புப் பணி அலுவலர் இரா.விஸ்வநாத் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# விளம்பர பலகைகள் அகற்றம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, ஆக.22-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீதிமன்ற வழக்கு தொடர்புடைய விளம்பரப் பலகைகள் மற்றும் உரிமம் பெறப்பட்ட விளம்பரப் பலகைகளை தவிர இதர அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனங்கள்/கட்டட உரிமையாளர்கள் அடுத்த 3 தினங்களுக்குள் கட்டுமானத்துடன் அகற்றிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகளை அகற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீதிமன்ற வழக்கு தொடர்புடைய விளம்பரப் பலகைகள் மற்றும் உரிமம் பெறப்பட்ட விளம்பரப் பலகைகளை தவிர இதர அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனங்கள்/கட்டட உரிமையாளர்கள் அடுத்த 3 தினங்களுக்குள் கட்டுமானத்துடன் அகற்றிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

விளம்பரப் பலகையை நிறுவுவதற்கு முன்பு விளம்பர நிறுவனத்திடம், மாநகராட்சியிடம் உரிமம் பெறப்பட்டுள்ளதா என்பதை கட்டட உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு உரிமம் பெறாமல் நிறுவப்பட்ட விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றிடுமாறும், தவறும்பட்சத்தில் கட்டடத்தின் உரிமையாளர்கள் மீது கட்டட அனுமதி சட்ட விதி களின் படி சட்ட நடவடிக்கை தொடரப்படும் என அறிவுறுத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் வணிக நிறுவனங்கள் தங்களது கடையின் பெயர்ப்பலகையினை தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 பிரிவு 327ல் தெரிவித்துள்ளபடி நிறுவப்பட்டிருந்தால் உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

மேலும், ஒரு பெயர்ப்பலகைக்கு மேல் வைக்க வேண்டுமானால் முறையாக அனுமதி பெற்ற பின்பே வைக்கப்பட வேண்டும். எனவே, கூடுதலாக பெயர்ப்பலகை வைத்துள்ள விளம்பர நிறுவனங்கள் 3 தினங்களுக்குள் அவற்றை அகற்றிட வேண்டும்.


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத் துறை**
**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 04 / 2024–2025 / தவஅ / நாள்: 17.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம், அவர்களால், சென்னை மாநகர சாலைகள் மற்றும் திருவள்ளூர் (நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த **நிரந்தர வெள்ளத் தடுப்பு பணிகள் 2023–2024** மற்றும் **CRIDP 2024-2025** -க்கு **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **24.09.2024 பிற்பகல் 12.30 மணி** வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.08.2024** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப சென்னை வட்டம்**

செ.ம.தொ.இ/3126/ஒப்பந்தப்புள்ளி/2024



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருச்சி (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**(இணையதள வழியில் மட்டும்)**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 4/2024–25 / முவஅ / நாள்: 17.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி அவர்களால் **ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகள் நபார்டு RIDF XXX / 2024-25-ன் கடனுதவி திட்டத்தின் கீழ் மதுரை** (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்திற்கான **எட்டு சாலைப் பணிகளுக்கு** இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.9.2024 அன்று 14.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.8.2024** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம்,**
**திருச்சி**

செ.ம.தொ.இ / 3187 / ஒப்பந்தப்புள்ளி / 2024



**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ. / எ.சு. திட்டங்கள் | 12 | 1 |
| 2 | மே.பொ. / கொ & நி / வ.செ.அ.மி.நி - 2 | 121, 133 | 2 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/3210/ஒப்பந்தப்புள்ளி/2024



**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு**

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2024- ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மேயர்**

செ.ம.தொ.இ / 867 / வரைகலை / 2024